**SACRED HEART COLLEGE**
**(Autonomous)**
Tirupattur - 635 601, Tirupattur Dt. ❖ Tamil Nadu ❖ South India
Ready for Every Good Work

College : (04179) 220553
Resi. : (04179) 220103
Fax. : (04179) 226423

A Don Bosco Institution of Higher Education, Founded in 1951 ✶ Affiliated to Thiruvalluvar University, Vellore ✶ Autonomous since 1987
Accredited by NAAC (4th Cycle - under RAF) with CGPA of 3.31/4 at 'A+' Grade

# MCA & MBA

## சிறுபான்மையின மாணவ மாணவியர்களுக்கு முக்கிய அறிவிப்பு

நம் கல்லூரியில் **MCA** மற்றும் **MBA** பயிலும் கிறிஸ்துவர் / இஸ்லாமியர் / புத்த மதத்தினர் / சீக்கியர் மற்றும் பார்சி வகுப்பைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை **(Minority Welfare - Merit Cum Means Scholarship for Professional and Technical Courses CS)** திட்டத்தின் கீழ் **2020 - 2021** ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற மாணவ / மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மாணவ / மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**MCA** மற்றும் **MBA** பயில்பவர்கள் **புதியது மற்றும் புதுப்பித்தல்** கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை **www.scholarships.gov.in** **(National Scholarship Portal)** என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் **Merit Cum Means Scholarship for Professional and Technical Courses CS** என்ற தலைப்பை தேர்வு செய்து அதில் கோரியுள்ள விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் ஆன்லைன் மூலம் பதிவு செய்த விண்ணப்பப் படிவங்களை படியிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ், சாதி, வருமானம், கல்வி கட்டணம் செலுத்திய ரசீது, இருப்பிட முகவரி சான்று, வங்கிக் கணக்கு எண் **(Core Bank Service Account Number, IFSC Code),** ஆதார் எண் ஆகிய ஆவணங்களை இணைத்து கையொப்பமிட்டு **31-10-2020**க்குள் **கல்லூரி முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி (தன்னியல்), திருப்பத்தூர் - 635 601, திருப்பத்தூர் மாவட்டம்** என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நாள் : 11-09-2020

SACRED HEART COLLEGE (AUTONOMOUS) TIRUPATTUR TIRUPATTUR DT. 635 601

முதல்வர் கையொப்பம்
Principal,
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur Dist.